DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST (POA) ACT 1989, RAMANATHAPURAM
**Spl.Sessions Case No. 41/2023**

அ.சா. 10

Prosecution witness
(Witness examined through video conferencing in accordance with Madras High Court video conferencing Rules 2020)

| | | | |
|---|---|---|---|
| Name: | திரு டி.காந்தி | Caste: | |
| Father's Name: | தாத கவுண்டர் | Calling: | கூடுதல் காவல் கண்காணிப்பாளர் |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | 59 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 19.12.2025.

( 1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜர்படுத்தப்பட்டார்)

முதல் விசாரணை

நான் தற்போது சேலம் காவல் பயிற்சி பள்ளியில் முதல்வராக பணியாற்றி வருகிறேன். கடந்த 01.06.2023ம் தேதி பரமக்குடி தாலுகா காவல்நிலையத்தின் உதவி ஆய்வாளர் திரு. ராமையா என்பவர் பதிவு செய்து என் பார்வைக்கு வைத்த மேற்படி காவல்நிலைய கு.எண். 141/2023 முதல் தகவல் அறிக்கையினை மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு அனுப்பி விசாரணை அதிகாரியை நியமிக்க வேண்டி அனுப்பிய கடிதத்தின் பேரில் இராமநாதபுரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தனது செயல்முறை ஆணை எண். C.No. 36/SJ&HR/RMD/2023, Dated: 01.06.2023 ன் மூலம் என்னை புலன் விசாரணை அதிகாரியாக நியமித்தார். அந்த செயல்முறை ஆணை உத்தரவு **அ.சா.ஆ.9**. நான் இவ்வழக்கை புலன் விசாரணைக்கு

02.06.2023ம் தேதி எடுத்துக்கொண்டு வழக்கின் சம்பவ இடமான பரமக்குடி காக்காத்தோப்பு அரசு மதுபானக்கடை அருகே காலை 7.00மணிக்கு சென்று சாட்சிகள் கோபி, குப்புசாமி ஆகியோர்களின் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர், வரைபடம் தயார் செய்தேன். நான் தயார் செய்த பார்வை மகசர் **அ.சா.ஆ.10**. வரைபடம் **அ.சா.ஆ.11**. மேலும் சம்பவ இடத்தில் அதே சாட்சிகளின் முன்னிலையில் காலை 8.00மணிக்கு சுமார் 72.5 செ.மீ நீளமுள்ள ஒரு ரீப்பர் சக்கை ஒன்றை அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றினேன். அந்த அத்தாட்சி **அ.சா.ஆ.12**. பின்னர் சாட்சிகள் பாலமுருகன், மோகன்ராஜ், துரை, சுதர்ஷன், கோபி மற்றும் குப்புசாமி ஆகியோரை விசாரித்து அவர்களின் வாக்குமூலங்களை பதிவு செய்தேன். இவ்வழக்கில் அன்றைய தினம் காலை 11.00மணிக்கு இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரி அருண்குமார், த/பெ. லாடசாமி என்பவரை உரப்புளி பேருந்து நிறுத்தத்தில் வைத்து கைதுக்கான காரணம் சொல்லி கைது செய்து காவல்நிலையம் வந்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். இவ்வழக்கில் பரமக்குடி வட்டாட்சியர் அவர்களுக்கு சாட்சி பாலமுருகன் மற்றும் எதிரிகள் அருண்குமார், த/பெ. லாடசாமி மற்றும் அருண்குமார் த/பெ. அரசுபாண்டி ஆகியோருக்கு சாதி சான்றிதழ்கள் வழங்க வேண்டி 18.06.2023ம் தேதி வேண்டுகோள் கடிதம் அனுப்பினேன். இந்நிலையில் நான் பதவி உயர்வின் காரணமாக மாறுதலாகிவிட்டதால் வழக்கு கோப்பை மேல்விசாரணைக்காக காவல்நிலையத்தில் ஒப்படைத்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

**இல்லை**

| | |
|---|---|
| Tmt. N. Yasomathi,<br>Translator,<br>Mahila Court,<br>Salem | Thiru. A. Mohamed Yasin,<br>Assistant,<br>PCR Court,<br>Ramanathapuram. |

| | | |
|---|---|---|
| Co coordinator<br>Remote site | Deponent | Co coordinator<br>Court site |

Sd/- C. Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases
Registered under SC/ST (POA) Act,
Ramanathapuram(FAC).